# சிறப்பு சார்பு நீதிமன்ற, (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)
# திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்,
# MCOP. 150/2021

2023–ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 19–ம் நாள் செவ்வாய்க்கிழமை 19.12.2023 (ம.சா.1) வது நபரின் வாக்குமூலம் (1959)–ம் ஆண்டின் 54 வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி திரு. M. பிரபு, இளநிலை உதவியாளர், என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : அலெக்ஸான்டர் | வயது | : |
| த.பெ. | : | தொழில் | : |
| ஊர் | : | சமயம் | : |
| வட்டம் | : | ஜாதி | : |
| மாவட்டம் | : | | |

<u>நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதில் உள்ள அனைத்து விவரங்களும் எனக்கு தெரியும்.</u>

2 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை.

இந்த வழக்கை எனது தாயார் தான் தாக்கல் செய்திருந்தார். வழக்கு நிலுவையில் இருந்தபோது எனது தாயார் இறந்துவிட்டார். எனது தாயார் மனு வில் கூறியுள்ள வழக்கு விவரங்களை நான் படித்து பார்த்தேன். எனது தாயார் உட்கார்ந்து சென்ற வண்டியின் பதிவெண்ணை வழக்கில் தெரிவித்திருந்தார். மனுவில் எனது தாயார் உட்கார்ந்து சென்ற வண்டியின் பதிவெண் TN 83 M 8273 என தெரிவித்துள்ளார். இதில் எனக்கு மாற்று கருத்து எதுவுமில்லை. மேற்படி வாகனம் எனக்கு சொந்தமானது மேற்படி விவரத்தை முதல் தகவல் அறிக்கையிலும் கூறப்பட்டுள்ளது.08.02.2021 தேதியில் நடந்த சாலை விபத்தில் நான் நேரில் பார்க்கவில்லை. வழக்கு விபத்து சம்பந்தமாக நான்தான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன், அதன் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. மேற்படி முதல் தகவல் அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். குற்ற எண் 40/2021 ,என்னுடைய முதல் விசாரணையில் TN 83 M 8273 குறிப்பிடாமல் தாக்கல் செய்ததற்கு கவனமில்லாமல் தாக்கல் செய்ததே காரணம். எனவே நீதிமன்றத்தில் மறைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. முதல் விசாரணையில் கூறியுள்ள எனது அப்பா ஓட்டி சென்ற வாகனம் என கூறியுள்ளதாக எனக்கு சொந்தமான வாகனமாகும்.என்னுடைய வாகனம் சோழ மண்டலம் இன்சூரன்ஸ் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்படுள்ளது. வாகனத்தின் உரிமையாளைானன என்னையும் வாகன காப்பீடு செய்யப்பட்ட சோழ மண்டலம் இன்சூரன்ஸ் நிறுவனத்தையும் சேர்க்கவல்லை என்றால் சரி.தேவையான தரப்பினரை சேர்க்காத காரணத்தால் வழக்கு தள்ளுபடி ஆக வேண்டும் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் Indian Overseas Bank ல் பணி ஆற்றி ஓய்வு பெற்றவர் என்றால் சரி. எனது தகப்பனார் ஓய்வு ஊதியம்

பெற்றிருந்தார் அவருக்கு வயது 61. எனது தாயாருக்கு வயது 59 விபத்து நடந்த தேதி 08.02.2021 . வழக்கு விபத்தில் காயம் பட்டதால் எனது தாயார் வழக்கு தாக்கல் செய்தார்கள் என்றால் சரி. எனது தாயார் 24.05.2021 ல் காலமாகி விட்டார். எனது தாயாரின் உடலை பிரேத பரிசோதனை செய்யவில்லை. விபத்து காயத்தினால் தான் எனது தாயார் இறந்துவிட்டார் என்று அரசாங்க மருத்துவர் யாரும் சான்று அளிக்கவில்லை என்றால் சரி. எனது தாயார் கொரனா தொற்றின் போது இறந்துவிட்டதால் பிரேத பரிசோதனை செய்யவில்லை என முதல் விசாரணையில் கூறவில்லை என்றால் சரி. எனது தகப்பனாருக்கு இருசக்கர வாகனம் ஓட்ட ஓட்டுநர் உரிமம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எனது தகப்பனாரின் ஓட்டுநா உரிமம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுளளதா என்று எனக்கு தெரியாது. எனது தகப்பனாரின் ஓட்டுநர் உரிமம் உள்ளது அதனை நீதிமன்றத்தில் ஒப்படைக்க தயாராக உள்ளேன். எனது முதல் விசாரணையில் எனது தகப்பனாருக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளதாக கூறவில்லை. எனக்கு சொந்தமான இருசக்கர வாகனத்தின் பதிவு சான்றை நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை. எனக்கு சொந்தமான இருசக்கர வாகனத்தின் காப்பீட்டு நகலை தாக்கல் செய்யவில்லை. எனது பெறறோர் தலைகவசம் அணிந்து சென்றதாக முதல் தகவல் அறிக்கையில் இல்லை. எனது தகப்பனால் அருசக்கர வாகனத்தை ஓட்டிச் சொன்ற போது அவருக்குமுறையான ஓட்டுநர் உாமம் இல்லை, சாலை விதிகனை கடைபிடிக்காமல் எவ்வித சமிக்சை செய்யாமல் தேசிய நெடுங்சாலையல் திசைமாறி சென்றதால் ஏற்பட்ட விபத்து என்றால் சரியல்ல. விபத்து நடந்த சாலை 2 வழிச்சாலை. எனமு தகப்பனார் திருப்பத்தூர் டூ கிருஷ்ணகிரி நோக்கி சென்றார், ஆனால் எந்த திசையில் சென்றார் எனகது தெரியாது. விபத்து நடந்த பகுதி கூட்ரோடு என்றால் சரி. எனது தகப்பனார் ஜி.ஜி காலனியில் உள்ள சொத்தை பார்ப்பதற்காக சென்றார். எனது தகப்பனார் திருப்பத்தூர் டூ கிருஷ்ணகிரி நோக்கி சென்றிருந்தால் மேற்கு திசை நோக்கி சென்றிருந்தார் என்றால் திசை எனக்கு தெரியாது. திருப்பத்தூர் இருநது கசிநாயக்கம்பட்டி நோக்கி செல்வதாக இருந்தால் மேற்கு திசையில்தான் சென்றிருக்க வேண்டும் என்றால் திசை எனக்கு தெரியாது. கணினி ஆப்பரேட்டராக பணிபுரிகிறேன் என்று முதல் தகவ்ல் அறிக்கையிலும் மனுவிலும் கூறியுள்ளேன். அதனை படிக்க வேண்டும் என்றால் ஏதாவது டிகிரி படித்திருக்க வேண்டும் நான் MBA படித்திருக்கிறேன். MBA படித்த எனக்கு திசை தெரியாது என்று கூறவது உண்மை மறைப்பதற்காக என்றால் சரியல்ல. எனது தகப்பனார் பின்னால் வந்த லாரியை கவனிக்காமல் மேற்கு திசையில் சென்று கொண்டிருந்தவர் திடீரென தெற்கு திசை நோக்கி திரும்பியதால் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கையில் TN 83 M 8273 என்ற வாகனமும் லாரி ஆக இரண்டு வாகனங்களையும் சொல்லியுள்ளேன் என்றால் சரி. என்னுடைய இருசக்கர வாகனத்தை காவல் துறையினரிடம் நான்தான் ஒப்படைத்தேன். மேற்படி வாகனம் இன்றும் திருப்பத்தூர் தாலுக்கா காவல் நிலையத்தில் தான் உள்ளது. எனது அருசக்கர வாகனத்தை போலிஸார் மோட்டார் வாகன ஆய்விற்கு கொண்டு சென்றார்கள் நான் உடன் செல்லவில்லை. போலிஸாரிடம் எனது வண்டியின் பதிவு சான்று மற்றும் காப்பீடடு நகல் கொடுத்தேனா என்று ஞாபகம் இல்லை. இருசக்கர வாகனத்தை திரும்ப பெற வேண்டி நீதிமன்றத்தில் மனு எதுவும் தாக்கல் செய்யவிலலை. என்னுடைய வண்டியின் பதிவு சான்று மற்றும் காப்பீட்டு நகல் இன்று வரை ஒப்படைக்காததற்கு காரணம் என்னிடம் நீதமன்றத்தார் கேட்காததால் நான் சமர்ப்பிக்கவில்லை, எனது முதல் விசாரணையில் எனது தகப்பனார் ஓட்டிச் சென்ற வாகனம் எனக்கு சொந்தமானது என கூறவில்லை என்றால் சரி. நீதிமன்றத்தில் தெரியபடுத்த கூடாது என மறைத்துள்ளேன்

என்றால் சரியல்ல, மேற்படி வண்டியின் பதிவு சான்று மற்றும் காப்பீட்டு நகல் நீதிமன்றத்தில் ஒப்படைக்க தயாராக இருக்கிறேன். எனது தகப்பனாருக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளது என எனது முதல் விசாரணையில் கூறவில்லை என்றால் சரி. ஓட்டுநர் உரிமம் இல்லாத நபரிடம் எனது வாகனத்தை கொடுத்தது எனது தவறு எனறால் சரியல்ல. முதல தகவல் அறிக்கையில் எனக்கு சொந்தாமான வாகனம் என்று குறிப்பிடாமல் எங்களுக்கு சொந்தமாக வாகனம் என்று குறிப்பிட்டுருந்தால் சரி. அவ்வாறு குறிப்பிட்டுள்ளது தவறை மறைப்பதற்கு சமம் என்றால் சரி. நான நீதிமன்றத்திற்கு துாய கரங்களுடன் வரவில்லை என்றால் சரி. எனது போட்ட வழக்கில் மகனுக்கு சொந்தமாக வாகனம் என்பதால் என்னையும் எனது வண்டியின் காப்பீட்டு நிறுவனத்தையும் தரப்பினராக சேர்க்கவில்லை என்ற காரணத்திற்காக வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.

(எதிர்மனுதாரரின் வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதன் பேரில் விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)